## (ஈ) பண நிரம்பல்*

1961ம் ஆண்டு கார்த்திகை மாதத்துடன் முடிவுற்ற பதினொரு மாதங்களில், பணநிரம்பல் 423 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3.5 சதவீதத்தால் உயர்ந்தது. முந்தைய ஆண்டு, 12 மாதங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு 311 இலட்சம் ரூபாய்கள் அல்லது 2.6 சதவீதம் ஆகும். 1960ம் ஆண்டு மார்கழி மாதம் 12089 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய பணநிரம்பல், 1961ம் ஆண்டு கார்த்திகை மாத முடிவில் 12511 இலட்சம் ரூபாய்களாக அதிகரித்தது. 1961ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், ஆண்டின் ஏனைய பகுதியிலும் பார்க்க மிகவும் குறிப்பிடும் படியான ஏற்ற இறக்கங்கள் பணநிரம்பலில் ஏற்பட்டன. 1960ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் 12089 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய பணநிரம்பல் மட்டம், 1961ம் ஆண்டு மாசி மாதம் 11934 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பின்னர் சித்திரை மாதத்தில் இது திரும்பவும் 13062 இலட்சம் ரூபாய்களுக்கு தீவிரமாக உயர்ந்தது. ஆயினும் வைகாசியில் பணநிரம்பலில் திரும்பவும் ஒரு தீவிரவீழ்ச்சி ஏற்பட்டது. அப்பொழுது இம்மட்டம் 12191 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதைப் பின்தொடர்ந்த மாதங்களில் பணநிரம்பல் விரிந்துகொண்டே சென்று புரட்டாதியில் 12614 இலட்சம் ரூபாய்களையடைந்தது. புரட்டாதிக்கும், கார்த்திகைக்கும் இடையே பணநிரம்பல் ஏறக்குறைய 10 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை II—30**

பண நிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம் 1957ல் இருந்து 1958 | சதவீத மாற்றம் 1958ல் இருந்து 1959 | சதவீத மாற்றம் 1959ல் இருந்து 1960 | சதவீத மாற்றம் 1960ல் இருந்து 1961 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை .. | 1,131 | 1,014 | 1,050 | 1,180 | 1,207 | —10·3 | + 3·6 | +12·4 | + 2·3 |
| மாசி .. | 1,105 | 1,016 | 1,053 | 1,192 | 1,193 | — 8·1 | + 3·6 | +13·2 | + 0·1 |
| பங்குனி .. | 1,107 | 1,023 | 1,089 | 1,194 | 1,210 | — 7·6 | + 6·5 | + 9·6 | + 1·3 |
| சித்திரை .. | 1,082 | 1,032 | 1,084 | 1,165 | 1,306 | — 4·6 | + 5·0 | + 7·5 | +12·1 |
| வைகாசி .. | 1,061 | 1,000 | 1,096 | 1,163 | 1,219 | — 5·7 | + 9·6 | + 6·1 | + 4·8 |
| ஆனி .. | 1,045 | 1,015 | 1,094 | 1,170 | 1,221 | — 2·9 | + 7·9 | + 6·9 | + 4·4 |
| ஆடி .. | 1,056 | 1,023 | 1,094 | 1,150 | 1,223 | — 3·1 | + 6·9 | + 5·1 | + 6·3 |
| ஆவணி .. | 1,024 | 1,022 | 1,095 | 1,161 | 1,231 | — 0·2 | + 7·1 | + 6·0 | + 6·0 |
| புரட்டாதி .. | 1,046 | 1,072 | 1,128 | 1,181 | 1,261 | + 2·5 | + 5·2 | + 4·7 | + 6·8 |
| ஐப்பசி .. | 1,052 | 1,085 | 1,153 | 1,212 | 1,248 | + 3·1 | + 6·3 | + 5·1 | + 3·0 |
| கார்த்திகை .. | 1,049 | 1,070 | 1,170 | 1,219 | 1,251 | + 2·0 | + 9·3 | + 4·2 | + 2·6 |
| மார்கழி .. | 1,040 | 1,077 | 1,178 | 1,209 | n.a | + 3·6 | + 9·4 | + 2·6 | n.a |

மூலம்: இலங்கை மகா வங்கி

1961ம் ஆண்டில் முதல் நான்கு மாதங்களில், குறிப்பாக சித்திரை மாதத்தில் பண நிரம்பலில் ஏற்பட்ட தீவிர உயர்ச்சிக்கு, சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள், நாணயங்கள் அதிகரித்தமையே பெரும்பாலும் காரணமாக விளங்கியது. இந்த நாணய அதிகரிப்பு வர்த்தக வங்கிகளுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் இடையே உண்டான பிணக்கின் விளைவாக வங்கிச் சேவைகள் நிலைகுலைந்தமையின்

---

* வேறு விதமாக எடுத்துக்கூறப்படாத நேரங்களில், இப்பகுதியிற் காணப்படும் 1961ம் ஆண்டு முடிவு எண்தொகைகள், 1961 கார்த்திகையிற் காணப்பட்ட எண்தொகைகளையே குறிக்கும். வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் மார்கழி எண் தொகைகள் கிடைக்கவில்லை.

விளைவாகவே ஏற்பட்டது. வங்கிச் சேவைகள் வழக்கமான நிலைக்கு மீண்டும் ஆரம்பமாகத் தொடங்கியதுடன் பணநிரம்பல் தீவிரமாக வீழ்ச்சியுற்றது. 1961ம் ஆண்டு பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயத்தாள், நாணயங்களின் அதிகரிப்பையே பெரும்பாலும் கொண்டிருந்தது. 1959ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பைக்கொண்டிருந்தது. இப்போக்குடன் ஒப்பிடுகையில் 1961ம் ஆண்டு காணப்பட்ட போக்கு வேறுபட்டதாக விளங்குகின்றது. பொதுமக்கள் வைத்திருந்த நாணயத்தாள்களும், நாணயங்களும் 1960ம் ஆண்டிற்குரிய 5953 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 6651 இலட்சம் ரூபாய்களுக்கு 1961ம் ஆண்டில் உயர, 1960ம் ஆண்டில் 6163 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய கேள்வி வைப்புகள், 1961ம் ஆண்டு 5861 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

### அட்டவணை II—31

### பண நிரம்பலின் கூறுகள்

*பத்து இலட்சம் ரூபாய்களில்*

| காலமுடிவில் | பொதுசனங்களிடம் உள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பண நிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1953 .. .. .. | 335·3 | 40·6 | 491·5 | 59·4 | 826·8 |
| 1954 .. .. .. | 341.8 | 35·7 | 615·3 | 64·3 | 957·1 |
| 1955 .. .. .. | 384·5 | 35·8 | 688·4 | 64·2 | 1,072·9 |
| 1956 .. .. .. | 401·1 | 35·6 | 725·7 | 64·4 | 1,126·8 |
| 1957 .. .. .. | 434·9 | 41·8 | 605·2 | 58·2 | 1,040·1 |
| 1958 .. .. .. | 529·8 | 49.2 | 546·9 | 50·8 | 1,076·8 |
| 1959 .. .. .. | 565·0 | 48·0 | 612·7 | 52·0 | 1,177·7 |
| 1960 .. .. .. | 595·3 | 49·2 | 613·6 | 50·8 | 1,208·9 |
| 1961 * .. .. .. | 665·1 | 53·2 | 586·1 | 46·8 | 1,251·1 |

* 11 மாதங்களின்படி    மூலம்: இலங்கை மகா வங்கி

பணநிரம்பலில், நாணயத்தாள்கள், நாணயங்கள் முதலியனவற்றைக்கொண்ட அம்சத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, பிரதானமாக பெரிய இனத்தாள்களில் உண்டாகிய அதிகரிப்பையே கொண்டிருந்தது. பல இனத்தாள்களில் அதிகரிப்பு ஏற்பட்ட பொழுதிலும், உயர்ந்த பெறுமான இனத்தாள்களில் உண்டான அதிகரிப்பு விகிதாச்சாரமாகப் பார்க்கையில் கூடியதாக விளங்கிற்று. 1960ம் ஆண்டு மார்கழியில் முறையே 174 இலட்சம் ரூபாய்களாகவும், 175 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய ரூ. 2/–, ரூ. 1/– இனத்தாள்களின் தொகைகள், 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம், முறையே 175 இலட்சம் ரூபாய்களுக்கும், 182 இலட்சம் ரூபாய்களுக்கும் உயர, ரூபா 50 இனத்தாள்களின் தொகை 1484 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1705 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. ரூபா 100/– இனத்தாள்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு 496 இலட்சம் ரூபாய்களாகும். 1960ம் ஆண்டு மார்கழியில் 1484 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இவ்வினத்தாள்களின் தொகை, 1961ம் ஆண்டு கார்த்திகையில் 1980 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. ரூபா 5/–, ரூபா 10/– முதலிய இனத்தாள்களின் தொகைகளில் ஏற்பட்ட மாற்றம் மிகவும் சொற்பமாக விளங்கியது குறிப்பிடத்தக்கது. 1960ம் ஆண்டு மார்கழியில் 2376 இலட்சம் ரூபாய்களாக இருந்த ரூபா 10/– இனத்தாள்களின் தொகை, 1961ம்

ஆண்டு கார்த்திகையில் 2374 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைய, ரூபா 5/- இனத்தாள்களின் தொகை 401 இலட்சம் ரூபாய்களிலிருந்து 395 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

மொத்தப் பணநிரப்பலிற் காணப்பட்ட நாணயம், நாணயத்தாள்கள் ஆகியவற்றின் விகிதத்தில் உண்டான அதிகரிப்பு, கடந்த ஆண்டில் மட்டும் தோன்றியது ஒன்றல்ல. 1945க்கும், 1947க்கும் இடையே உள்ள காலத்தில் நாணய வெளியீடு பணநிரம்பலின், 40 சதவீதத்திற்கு மேலதாக விளங்கியது. 1949க்குப் பின்னர் பணநிரம்பலில், நாணய வெளியீட்டின் விகிதம் உறுதியாக வீழ்ச்சியடைந்து வந்தது. 1956ம் ஆண்டு மொத்தப் பணநிரம்பலில், நாணயம் நாணயத்தாள்கள் 35.6 சதவீதத்தைக் கொண்டனவாகவும், வைப்புகள் 64.4 சதவீதத்தைக் கொண்டனவாகவும் அமைந்தன. 1957க்குப் பின்னர் மொத்தப் பணநிரம்பலிற் காணப்பட்ட நாணயம், நாணயத்தாள் ஆகியவற்றின் விகிதத்தில் ஒரு தீவிர அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1957ம் ஆண்டு, நாணய வெளியீட்டின் விகிதம் 35.6 சதவீதத்தில் இருந்து 41.6 சதவீதத்திற்கு உயர்ந்தது. 1958ம் ஆண்டு இது 7.4 சதவீதத்தால் மேலும் அதிகரித்து 49.2 சதவீதம் ஆகியது. அதன் பின்னர் பணநிரம்பலில் நாணயம், நாணயத்தாள்களின் சராசரி விகிதம் 48 சதவீதத்திற்கும் மேலாக விளங்கி வருகின்றது.

வங்கி வைப்புக்களின் தொகைகளுடன் ஒப்பிடுகையில், நாணயம் நாணயத்தாள்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. பணநிரம்பலிற் காணப்படும் நாணயம், நாணயத்தாள்களின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பு, நாளடைவில் வங்கித் தொழிலைப் பாதிக்கத்தக்க ஒரு விளைவைக் கொண்டுவரும். ஏனெனில் இது வர்த்தக வங்கிகளுக்கும் வைப்புக்கள் வடிவத்தில் கிடைக்கும் சாதனங்களைக் குறைக்கச் செய்துவிடும். பணநிரம்பலில் வங்கி வைப்புக்களின் பங்கு அதிகரிக்கும். இந்த இயக்கம் நாட்டிற் காணப்படும் வங்கித் தொடர்புப் பழக்கத்தின் சுருக்கத்தைப் பிரதிபலிக்கவும் கூடும். வங்கித் தொழிலின் முக்கியத்துவம் குறைவுற்றால், இது பொருளாதாரத்தை ஒழுங்குப்படுத்த உதவும் முறையாக உள்ள நாணயக் கொள்கை பலவீனமடைவதற்கு வழிகாட்டும். மொத்தப் பணநிரம்பலிற் காணப்படும் நாணயம், நாணயத்தாள்களின் விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, கடந்த சில ஆண்டுகளிற் காணப்பட்ட பண வருமான உயர்ச்சி, சமுதாயம் முழுவதிலும் கூடிய முறையிற் பரந்து பங்கிடப்பட்டு, சாதாரணமாக வங்கி வசதிகளை நாடாத பகுதிகளிற் சேர்ந்துள்ளது என்று நம்பக்கூடியதாக உள்ளது. மேலும் வங்கிகளிற் கணக்கு வைத்திருப்பவர்களிற் சிறு நிலுவைகளையுடையவர்களின் மேல் வங்கிகள் விதிக்கும் உயர்ந்த கட்டணங்கள் (அவையின் நியாய, நியாயீனங்கள் ஒருபுறம் இருக்க) மேற்கூறிய மக்களிடம் வங்கித் தொடர்புப் பழக்கத்தை விரிவாக்குவதற்குத் தடையாக விளங்குகின்றது. உயர்ந்த இனத்தாள்களில், குறிப்பாக ரூபா 100/-, ரூ. 50/- முதலியனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக்கூட, பணத்தைக் காசு ரூபத்தில் வைத்திருக்கும் மேலான நாட்டத்தையே காட்டுகின்றது. பொதுவான வியாபார நிலைமையின் உறுதியற்றத்தன்மை, வரி செலுத்தாதிருப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த காரணம், முதலிய காரணங்களும் மேற்கூறிய தன்மையின் தோற்றத்திற்குப் பொறுப்பாக விளங்கியிருக்கக்கூடும். மேலும் சில வேளைகளில் வங்கிப்பற்றுக்களின் பேரில் உள்ளவரி, காசோலையிலும் பார்க்கக் காசு மூலமாகக் கொடுக்கல் வாங்கல்களை நடாத்துவதற்குத் தூண்டுதல் செய்திருக்கக்கூடும்.

பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணங்களைப் பின் வரும் அட்டவணை 1956ம் ஆண்டிலிருந்து ஒப்பியல் அடிப்படையிற் சுருக்கித் தரு கின்றது.

### அட்டவணை II—32

### பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1956—57 மார்கழி முடிவில் | | 1957—58 மார்கழி முடிவில் | | 1958—59 மார்கழி முடிவில் | | 1959—60 மார்கழி முடிவில் | | 1960—61 மார்கழி முடிவில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வங்கிகளின் வெளியூர்ச் சொத்துக்கள் (நிகர) .. | — | 209·2 | — | 82·2 | — | 195·0 | — | 170·2 | — | 70·7 |
| 2. வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் | | | | | | | | | | |
| (அ) தனிப்பட்டோர் துறைக்குக் கொடுகடன் .. | 55·3 | — | 53·4 | — | 9·7 | - | 31·5 | — | — | 2·6 |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்க பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | — | 7·4 | — | 39·6 | 30·2 | — | 6·0 | — | 27·2 | — |
| 3. மகா வங்கியின் தொழிற்பாடுகள் | | | | | | | | | | |
| (அ) அரசாங்கத்துக்கு முற்பணங்கள் .. | 32·6 | — | 75·0 | — | 61·8 | — | 21·9 | — | 20·1 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | 42·2 | — | 100·6 | — | 191.0 | — | 224.3 | — | 109·5 | — |
| (இ) ஏனைய இருப்புச் சொத்துக்கள் (நிகர) .. | — | 10·3 | 24·5 | — | — | 27·9 | — | 19·3 | — | 6·0 |
| 4. வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் (நிகர) .. | — | 38·4 | — | 68·1 | — | 23·2 | — | 72·5 | — | 24·8 |
| 5. அரசாங்கப் பணமிச்சங்கள் .. | 49·3 | — | — | 36·4 | 64·0 | — | 8·0 | — | — | 12·9 |
| 6. சீராக்கங்கள் .. | — | 0·8 | 9·6 | — | - | 9·6 | 1·4 | — | 2·5 | — |
| மொத்த விரிவு அல்லது சுருக்கக் காரணிகள் .. | 179·4 | 266·1 | 263·1 | 226·3 | 356·7 | 255·7 | 293·1 | 262·0 | 159·3 | 117·0 |
| பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றம் .. | —76·9 | | +36·6 | | +101·0 | | +31·1 | | + 42·3 | |

மூலம்: இலங்கை மகாவங்கி

முந்தைய ஆண்டு அறிக்கைகளில், அரசாங்கத்தின் நிதியியக்கங்களே பண நிரம்பலின் விரிவை நிர்ணயித்த மிக முக்கிய காரணமாக விளங்கின என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1961ம் ஆண்டிலும்கூட இவ்வியக்கங்களே பண நிரம்பலின் நடமாட்டத்தை நிர்ணயித்த பிரதான காரணியாக விளங்கின. ஆனுல் 1959/60ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1960/61ல் அரசாங்க நிதிக்கொடுக்கல் வாங்கல்களினுல் ஏற்படக்கூடிய பண விரிவு தாழ்வாகவே இருக்குமென நம்பப்படுகிறது. 1961ம் ஆண்டின் முதற் பதினெரு மாதங்களிலும் இலங்கை மகாவங்கியின் உடமைகளான அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும் 1095 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது என்பது முந்தைய ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பான 2243 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடத்தக்கது. இதேகாலத்தில் வர்த்தக வங்கிகளின் உடமைகளான இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள் முதலியன 272 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தமை முந்தைய ஆண்டிற்குரிய அதிகரிப்பான ரூபா 60 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். மகாவங்கி அரசாங்கத்திற்குக் கொடுத்த முற்பணங்கள் 1960ம் ஆண்டு 219 இலட்சம் ரூபாய்களால்

அதிகரித்திருக்க, 1961ம் ஆண்டு 201 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கொடுகடன் அளவு அதிகரித்தமையால், பணநிரம்பலில் ஏற்பட்ட நிகர விரிவு, 1960ம் ஆண்டில் 2602 இலட்சம் ரூபாய்களாகவும், 1961ம் ஆண்டு 1439 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

முந்தைய ஆண்டிற் காணப்பட்டதுபோலவே சென்மதி நிலுவை நிலைவரம் பணநிரம்பலிற் சுருக்கத்தைக் கொண்டுவரும் பிரதான காரணமாக விளங்கியது. 1960ம் ஆண்டிலும் பார்க்க 1961ம் ஆண்டில் வெளிநாட்டுச் சொத்துக்களின் இழப்பு கணிசமாகக் குறைந்து விளங்கியமையால் வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, முந்தைய ஆண்டுகளைப்போன்று, அதே அளவுக்குப் பணநிரம்பலைக் குறைக்கவில்லை. 1961ம் ஆண்டு வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட இழப்பின் விளைவாக பணநிரம்பலில் ஏற்பட்ட சுருக்கம் 1956ம் ஆண்டிற்குப் பின்னர் உள்ள எந்த ஆண்டுகளிலும் பார்க்க மிகக் குறைவாகவே விளங்கிற்று. வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியால் பணநிரம்பலில் உண்டாகிய சுருக்கம், 1959ம் ஆண்டு 1950 இலட்சம் ரூபாய்களாகவும், 1960ம் ஆண்டில் 1702 இலட்சம் ரூபாய்களாகவும், 1961ம் ஆண்டில் 707 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிற்று. இந்த ஆண்டுகளிற் காணப்பட்ட அதே வீதத்தில் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்துகொண்டே சென்றிருந்ததால், பணநிரம்பல் ஒருவேளை 423 இலட்சம் ரூபாய்களுக்கும் மிகக் குறைவாகவே விரிந்திருக்கக்கூடும். ஆகவே ஏனைய விரிவுக் காரணிகள் தொடர்ந்து இயங்கியுள்ள ஒரு பின்னணியில், பணநிரம்பலின் போக்கு, 1961ம் ஆண்டு சென்மதி நிலுவை நிலவரத்தில் ஏற்பட்டுள்ள சீர்திருத்தத்தைப் பிரதிபலிக்கின்றது. நிலையான வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும், ஏனைய பொறுப்புக்களும், 1960ம் ஆண்டில் 725 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்க, 1961ம் ஆண்டு இவை 245 இலட்சம் ரூபாய்களால் மட்டும் உயர்ந்தன. அரசாங்கப் பணமீதிகள், 1959ம் ஆண்டில் 640 இலட்சம் ரூபாய்களாலும், 1960ம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியடைந்திருக்க, 1961ல் இவை 129 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.